8th August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : செக்போஸ்ட்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி ஒழுங்கீனமாக நடக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் எந்தவிதமான கட்டுப்பாடு வைத்தாலும் கூட அதை மீறுவதற்குத்தான் முயற்சிப்பார்கள். ஆகவே, அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். செக்போஸ்ட்களை அமைப்பதால் நான் தெரிந்து கொண்டவரையில் தாராளமாய் உணவுத் தானியம் போவது தடைபடுகிறது. அதனால் இந்த ராஜ்யத்திற்கு லாபமாக இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த செக்போஸ்ட்களினால் நிறையப் பேர்கள் சம்பாதிக்கிறார்கள். இதிலே நிறை லஞ்சம் இருக்கிறது. இந்த செக்போஸ்ட்கள் நிறைய இருக்கின்றன. சென்னைக்கு வரும் வழியில் 5, 6 செக்போஸ்ட்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படியில்லாமல் ஒரு செக்போஸ்ட் வைப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : 5, 6 செக் போஸ்ட்கள் வைத்தே திருட்டுத் தனமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது ஒரு செக் போஸ்ட் மட்டும் இருந்தால் அவர்களுக்கு இன்னும் சுலபமாக இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த உணவுத் தானியங்களை மாவட்டத்திற்கு மாவட்டம் தான் கொண்டு செல்லக்கூடாது என்று எஸன்ஷியல் கமாடிட்டீஸ் ஸப்ளைஸ் ஆக்ட் படி அமல் நடத்தப்பட வேண்டும். ஆனால், தாலுகாவிற்குத் தாலுகா கூட, பிர்க்காவிற்கு பிர்க்காகூட கொண்டு செல்லமுடியாத அளவுக்கு செக்போஸ்ட்கள் போடுகிறார்கள். ஆகவே, ஒரு ஜில்லாவிற்குள்ளேயே கொண்டு போவதற்கு தடையில்லாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது அங்கங்கே இருக்கக்கூடிய மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம். ஆனால், எந்த எந்த மாவட்டங்களில் உணவு நெருக்கடியோ அல்லது தீவிரக் கொள்முதலோ இருக்கிறதோ அங்கேயெல்லாம் இண்ட்ரா-டிஸ்ட்ரிக்ட் மூவ்மெண்ட்டுக்குக்கூடத் தடை வைத்திருக்கிறார்கள்.

திரு. ஆ. தங்கவேலு : இரண்டு ஜில்லாக்கள் சேரும் எல்லையாக இருந்தால் அங்கே இரண்டு செக்போஸ்ட்டுகள் போடவேண்டிய அவசியம் இல்லை. ஒரு செக்போஸ்ட் போட்டால் போதாதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதையும் தொடர்ந்து அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பங்கீட்டு அலுவலகம், மயிலாப்பூர்

*221 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரில் உணவு பங்கீட்டு அலுவலகம் துவக்கப்பட்டபோது இருந்த கட்டடத்துக்குக் கொடுக்கப்பட்ட வாடகை என்ன ?

[8th August 1966

(இ) 1965-ஜனவரி முதல் புதிதாக மாற்றப்பட்டிருக்கிற கட்டடத்திற்கு கொடுக்கப்படுகிற வாடகைத் தொகை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Only one Office, viz., Circle Office, Mylapore was located in one small building at 176, Rama Krishna Mutt Road, Mylapore. The rent demanded by the owner is Rs. 500. The fair rent has not been fixed by the Public Works Department authorities. The Circle Office was closed down and a Government Ration Shop is now functioning there.

(*b*) The rent demanded by the owner for the new building at 961, Katchery Road, Mylapore, which houses three Circle Offices, a Zonal Office and a Government Ration Shop including the Circle Office at Mylapore is Rs. 1,850. The fair rent has not yet been fixed by the Public Works Department authorities.

திரு. செ. மாதவன்: *500 ரூபாய் வாடகை கேட்டதாய் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் செய்வதற்கு முன்னால், அதே வீட்டுக்கு, அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு முன்னால் குறைந்த வாடகைத்தான் இருந்தது என்று தெரிகிறது. அதற்கு முன்பு 200 ரூபாய் வாடகை இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இதைப் பரிசிலனை செய்வார்களா?*

கனம் திரு. வெ. ராமைய்யா: *அவசர நிமித்தமாகச் சில ஏற்பாடுகளை சிவில் சப்ளைஸ் ஆபீசர்ஸ் செய்கிறார்கள். அவ்வாறு ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் பண்ணவேண்டிய பொறுப்பு பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைப் பொறுத்தது. அவர்கள் வேண்டிய தகவல்களை வைத்துக்கொண்டு முடிவு செய்வார்கள்.*

திரு. து. ப. அழகமுத்து: *ஃபேர் ரெண்ட் எந்த அடிப்படையில் ஃபிக்ஸ் செய்கிறார்கள்?*

கனம் திரு. வெ. ராமைய்யா: *அதற்காக ஸ்பெஸிஃபிக் ரூல்ஸ் பி.டபிள்யூ.டி. யில் இருக்கின்றன.*

Sugar

* 222 *Q*.—SRI V. SANKARAN: Will the hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any report has been received regarding accumulation of sugar stocks in the North Arcot Co-operative Sugar Mills at Ambur; and

(*b*) if so, the details thereof and the action proposed thereon?

கனம் திரு. வெ. ராமைய்யா: *(அ) இல்லை.*

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன்: *அமைச்சர் அவர்கள் இன்றைக்குள்ள நிலையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் கேள்வி போட்ட நேரத்தில் இந்த மாதிரி முடங்கிக் கிடந்தது என்பது உண்மையா?*

கனம் திரு. வெ. ராமைய்யா: *அன்றைக்கு இருந்த நிலைமைக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறேன்.*